NOOLAHAM FOUNDATION

**நூலக நிறுவனம்**

**மாதாந்த அறிக்கை –ஜனவரி 2017**

வணக்கம்,

நூலக நிறுவனத்தின் 2017 ஜனவரி மாத ஆவணமாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)**

| வகை | எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 532 | 15,334 |
| பக்கம் தவறியவை | 06 | 156 |
| நோக்கில் அடங்காதவை | 01 | 292 |
| மொத்தம் | **539** | **15,782** |

**எண்ணிம நூலகம் (Digital Library)**

- 2016 நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் ஆவணவாக்கப்பட்டவற்றில் 6000 ஆவணங்கள் வலைத்தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மிகுதி பெப்ரவரி மாதங்களில் பதிவு செய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் ஆவணவாக்கப்பட்ட ஆவணங்கள் மார்ச் மாத அளவில் வலைத்தளத்தில் பதிவு செய்யப்படும்.

- இம்மாத்திலிருந்து ஆவணங்களின் முக்கியத்துவமுணர்ந்து எமது தன்னார்வலர்களினால் கனடாவிலும் மின்வருடல் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- ஆவணங்களின் முக்கியத்துவம் உணர்ந்து பக்கங்கள் சிதைந்த, தவறிய ஆவணங்களும் மின்வருடப்பட்டுள்ளன.

- சேகரங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற 6,500 ஆவணங்களிற்கு இம்மாதம் பட்டியல் தயாரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

- ஆவணவாக்கலில் ஆசிரியர் மற்றும் பதிப்பாளர்களான ஏ.பீர். முஹம்மது, திக்குவல்ல கமால், இ. பாலசுந்தரம், ஆத்மஜோதி நிலையம், இந்து சமயப் பேரவை, சுதர்சன் ஸ்ரீனிவாசன், வி. கந்தவனம் ஆகியோரது சேகரிப்புக்களும் வெளியீடுகளும் ஆவணவாக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் பெப்ரவரி மாதம் இவர்களின் சேகரிப்புக்கள் ஆவணவாக்கப்படவுள்ளன. ஆவணங்களை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

**ஆவணகம் வலைத்தளம் (Avanavaham)**

- 2017 தைப்பொங்கலன்று தொடங்கப்பட்ட ஆவணகம் வலைத்தளத்தில் கீழ்வரும் விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

| வகை | எண்ணிக்கை |
|---|---|
| நூற்பட்டியல் | 191 |
| ஒலிச்சேகரம் | 30 |
| படங்கள் சேகரம் | 100 |
| நிகழ்படச் சேகரம் | 12 |
| மேற்கோள்கள் | 4 |
| குறுங்கால ஆவணங்கள் | 200 |
| எழுத்தாவணங்கள் | 14 |
| தனிநபர் சேகரங்கள் | 2 |
| ஓவியங்கள் சேகரம் | 24 |
| கையெழுத்து ஆவணங்கள் | 10 |

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

- ஜனவரி மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.

வெளியீட்டாளர்கள்

★ Jaffna National College of Education

எழுத்தாளர்கள்

★ கந்தசாமி, நாராயணபிள்ளை
★ சதாசிவம், அமிர்தலிங்கம்
★ பாலகிருஷ்ணன், இரகுவரன்
★ ஆனந்தராணி நாகேந்திரன்
★ சந்திரகலா வேலு
★ லதா, க.
★ கருணாகரன், கிருஷ்ணன்
★ சரவணன், க.
★ சிவசேகரன், சிவலிங்கம்
★ வேலும்மயிலும், கந்தையா

- ★ முல்லைதிவ்யன், அ.
- ★ யசோதா கண்ணன்
- ★ தேனுஷா நாகேஸ்வரன்
- ★ தேவகி ராமேஸ்வரன்
- ★ தர்ஷன், அருளானந்தம்
- ★ தர்மினி பத்மநாதன்
- ★ கணேஷன், தர்மதேவன்
- ★ தமிழ்கவி
- ★ சரவணன், கை.
- ★ அம்ரா புஹாரி
- ★ மிஷாந்தி செல்வராஜா
- ★ ஞானமாதங்கி, எஸ்.
- ★ சிவாஸ்கந்தஸ்ரீ

**காப்புப்படி (Backup)**

- மாதாந்தம் யாழ்ப்பாணத்தில் இருந்து மின்வருடப்படும் ஆவணங்கள் காப்புப்படியிற்காக கொழும்பு அனுப்பப்படுகின்றன. அதில் நூலக இலக்கங்களை கொண்ட ஆவணங்கள் வன் தட்டுக்களில் பதிவேற்றப்படுகின்றன. இம்முறை 23.01.2017 அன்று நூலக எண் 21001-32500 வரையான ஆவணங்களுக்கான கடைசி காப்புப்படி கிடைக்கப்பெற்றது.

**நிர்வாகம் (Administration)**

- கட்டைபிராய், யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த யாழ்ப்பாணக அலுவலகம் இம்மாதத்திலிருந்து இல. 100, ஆடியபாதம் வீதி, கொக்குவில் என்ற முகவரியிற்கு மாற்றப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அருகில் அதிக வசதிகளுடன் கூடியதாக உள்ள இந்த அலுவலகம் மூலம் நூலகச் செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கிறோம்.

**வரவு செலவு அறிக்கை (Financial Statement)**

- ஜனவரி மாதத் தேவைகளுக்காக ரூ. 457,083.73 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் 246,925.00, உபகரணம் மற்றும் பராமரிப்பு செலவு 123,000.00, வாடகை 30,000.00, தொலைபேசி மற்றும் இணையம் 21,307.73, மின்சாரம் 4,895.00 மற்றும் ஏனைய செலவுகளும் உள்ளடங்குகின்றன.

- ஜனவரி மாதம் ஐக்கிய அமெரிக்க அன்பர்கள் ஊடாக 337,000.00 ரூபாவும் அவுஸ்திரேலிய அன்பர்கள் ஊடாக 110,000.00 ரூபாவும் கனடா அன்பர்கள் ஊடாக 102,563.33 ரூபாவும் ரூபாவும் நன்கொடையாக கிடைக்கப்பெற்றது.

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகிறது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.